தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 215/மா/2022
நாள்: 21.01.2023

திரு. இரா. மயில்சாமி, புதுவிளாங்குடி,
மதுரை – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர், மண்டலம் –02,
மதுரை மாநகராட்சி, மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.05ல் வசிக்கும் திரு.இரா.மயில்சாமி என்பவரின் 20.10.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.10.2022–ல் பெறப்பட்டு 215/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.05ல் வசிக்கும் திரு.இரா.மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 20.10.2022 நாளிட்ட தனது மனுவில் :

" மதுரை மாநகராட்சி மண்டலம் 02 (வடக்கு) வார்டு எண் 1, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், கதவு எண்.63 மூன்றாவது கிராஸ் தெருவில் குடியிருந்து வரும் திரு. இராஜா என்பவர் தன் சொந்த வீட்டில் திருட்டுத்தனமாக டிஸ்டில்டு வாட்டர் (Distilled) பேட்டரிகளுக்கு ஊற்ற கூடிய தண்ணீர் தயாரிக்கும் பணியும் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையமும் நடத்தி வருகிறார். இதற்கு தேவையான தண்ணீரை மாநகராட்சி குடிநீரை 5 H.P. மின் மோட்டார் வைத்து உறிஞ்சி பெரிய தொட்டியில் நீரை நிரப்பிக்கொண்டு அவருடைய தொழில் நிறுவனத்திற்கு பயன்படுத்தி கடந்த நான்கு ஐந்து ஆண்டுகளாக நடத்தி வருகிறார். வீட்டில் இச்சிறு தொழிற்சாலை செய்வதற்கு முறையாக உரிய துறைகள் மூலம் அனுமதி ஏதும் பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக நடத்தி வருகிறார். மேலும் இக்கட்டிடத்திற்கு வணிகத்திற்கான (commercial) சொத்துவரி வசூலிக்கப்படவில்லை. சாதாரண வீட்டுவரி வசூலிக்கப்படுகிறது. தொழில்வரியும் வசூலிக்கப்படுவதில்லை. இதனால் மதுரை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்பட்டு வருகிறது. மேற்படி டிஸ்டில்டு வாட்டர் (Distilled water) மற்றும் குடிநீர் தயாரித்து வரும்

திரு.இராஜா என்பவர் தொழில் செய்து வருவது, மதுரை மாநகராட்சி அலுவலகம், புதுவிளாங்குடி அலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து அலுவலர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர் அவர்களுக்கு நன்கு தெரியும். இவர்கள் திரு.இராஜா என்பவரிடம் கையூட்டல் பெற்றுக்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வருகிறார்கள். சிறிய தொழிற்சாலை நடத்தி வருவதால், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வாளர்களிடம் அனுமதி பெறவில்லை. மேலும் இது ஒரு பொது கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2(8)ன்படி (section2(8) of the Tamil Nadu Public Buildings (Licensing) Act 1965) ன்படி முறையாக அனுமதி பெறவில்லை. மேலும் மாநகராட்சி கட்டிட அனுமதியை விட கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி முகவரியில் இயங்கிவரும் டிஸ்டில்டு வாட்டர் மற்றும் சுத்திகரிப்பு நிலையம் இயங்கி வருவதையும், கண்காணிக்கத் தவறியதும், வருவாய் இழப்பிற்கு காரணமான முன்னாள் இந்நாள் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும், மேற்படி திரு.இராஜா அவர்கள் எந்த துறையிலும் முறையாக அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக டிஸ்டில்டு வாட்டர் (Distilled water) மற்றும் சுத்திகரிப்பு குடிநீர் தயாரிப்பு கட்டிடத்தை (வீட்டை) நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன் பிரிவுகள் 56 மற்றும் 57ன் கீழ் முத்திரையிட்டும் மற்றும் மூடுதல் (Lock and seal) போன்ற அமலாக்க நடவடிக்கை உடனடியாக எடுக்க மதுரை மாநகராட்சி ஆணையர், மற்றும் உதவி ஆணையர் அவர்களுக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரர் புகார் மனு தொடர்பாக மதுரை மாநகராட்சி உதவி ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது. மதுரை மாநகராட்சி, துணை ஆணையர் தனது 26.12.2022 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

" திரு.மயில்சாமி என்பவரது கோரிக்கை தொடர்பாக மதுரை மாநகராட்சி மண்டலம் – 2(வடக்கு) வார்டு எண்.1,புதுவிளாங்குடியில் உள்ள செம்பருத்தி நகர் கதவு எண்.63 மூன்றாவது குறுக்கு தெருவில் இயங்கி வரும் தொழிற்சாலையை மூடுதல் மற்றும் முத்திரையிடக்கோரியது தொடர்பாக 1971ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம் 282, 296(1) & (2) பிரிவின் கீழ் நோட்டீஸ் தயார் செய்து திரு.இராஜா என்பவருக்கு சார்பு செய்யப்பட்டது என்ற விவரம் கடிதம் மூலம் திரு.மயில்சாமி என்பவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் நகல் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

3) மேற்கண்ட மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 03.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 21.12.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் ஆகியோர் 03.01.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமாப்பித்துள்ளனர் :

" மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி மண்டலம் (வடக்கு) வார்டு எண் 1 புது விளாங்குடி செம்பருத்தி நகர் மூன்றாவது தெரு கதவு எண் 63ல் இயங்கி வரும் டிஸ்டில்டு வாட்டர் தயாரிக்கும் நிறுவனம் D & O உரிமம் பெற்றுள்ளனர். மேற்கண்ட நிறுவனத்திற்கு வணிக வரி விதிக்கப்படவில்லை. மாறாக அக்கட்டிடத்திற்கு குடியிருப்பு வரியே மாநகராட்சியால் வசூலிக்கப்பட்டு வருகிறது. தற்போது அக்கட்டிடத்திற்கு வணிகவரி விதித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இம்முறைமன்றத்தில்

தெரிவித்துக்கொள்கிறோம். மேற்கண்ட நிறுவனம் கடந்த 2010க்கு முன்னர் அதாவது மதுரை மாநகராட்சி ஆவதற்கு முன் பேரூராட்சியின் மூலம் குடிநீர் இணைப்பு பெற்றுள்ளனர். சட்டத்திற்கு புறம்பாக குடிநீரை அந்நிறுவனம் பயன்படுத்தி வருகிறதா என்பதையும், அந்நிறுவனத்திலிருந்து வெளியேறும் கழிவு நீர் முறையாக வெளியேற்றப்படுகின்றதா என்பதை கண்காணிக்கப்பட்டு வந்துள்ளது என்பதையும், இதற்கிடையே மேற்கண்ட நிறுவனம் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அந்நிறுவனத்திற்கு மூடி முத்திரையிடும் நோட்டீஸ் 26.12.2022 அன்று வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

5) மனுதாரர் தனது உடல்நலக்குறைவினால் 03.01.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை. மனுதாரர் 03.01.2023 அன்றைய தேதியில் ஆஜராக இயலாததால் 05.01.2023 அன்று நடைபெற்ற பிரிதொரு மனுவின் மீதான நேரடி விசாரணையில் ஆஜராகும்போது, இந்நேர்வு குறித்து தன்கைப்பட எழுதியுள்ள விவரங்களை முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். அதில்

" மதுரை மாநகராட்சி மண்டலம் 02 (வடக்கு) வார்டு 1, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, குறுக்குத்தெரு, சேலம் ஸ்டோர்ஸ்க்கு பின்புறத்தில் திரு. இராஜா என்பவர் கதவு எண்.63, மூன்றாவது கிராஸ் ரேரட்டில் தனது சொந்த வீட்டில் சிறிய தொழிற்சாலை நடத்தி வருகிறார். இதில் டிஸ்டில்டு வாட்டர் (Distilled water) பேட்டரிகளுக்கு ஊற்றக்கூடிய தண்ணீர் தயாரித்தும் மற்றும் குடிநீர் பிளான்ட்டும் அமைத்து குடிநீர் விற்பனை செய்து வருகிறார். இதற்கு எந்தவித அரசு விதிகளின்படி அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக திருட்டுத்தனமாக தொழில் செய்து வருகிறார். மேலும் தொழிற்சாலைக்கு தேவையான தண்ணீரை, மக்கள் குடிக்ககூடிய மாநகராட்சி நீரை திருட்டுத்தனமாக 5H.P. மின்மோட்டாரில் உறிஞ்சி அவருடைய வீட்டில் ராட்சச தொட்டியில் நிரப்பிக்கொள்கிறார். இதனால் இப்பகுதியில் வாழும் சுமார் 100 குடும்பங்களும் குடிநீருக்கு திண்டாடி வருகிறார்கள். இதிலும் குடிநீர் தினந்தோறும் வருவதில்லை. ஒருநாள் விட்டு ஒருநாள்தான் வருகிறது. இதுகுறித்து பல நாட்கள் மாநகராட்சி அதிகாரிகளுக்கு புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. இப்பகுதியில் இயங்கி வரும் மாநகராட்சி ஊழியர்கள் திரு.இராஜா அவர்களிடம் கையூட்டல், , பொங்கல்பரிசு, தீபாவளி போனஸ் பெற்றுக்கொண்டு கண்டும் கானாமல் இருந்து கொள்கிறார்கள். குறிப்பாக 15.10.2022 தேதியில் பதிவு தபாலில் புகார் அளித்தும் இன்றுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. மேற்படி திரு.இராஜா அவர்கள் நடத்திவரும் டிஸ்டில்டு வாட்டர் (Distilled water) குடிநீர் தயாரிப்பு நிறுவனம், தொழிற்சாலை, பொதுமக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2(8)ன்படி உரிமம் பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக நிறுவனம் நடத்தி வருகிறார். தொழிற்சாலையில் வரும் கழிவு நீரினால் பொதுமக்களுக்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டு வருகிறது. எனவே சட்டத்திற்கு புறம்பாக திருட்டுத்தனமாக சிறு தொழிற்சாலை நடத்திவரும் திரு. இராஜா அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தும், குடிநீரை உறிஞ்சும் மின் மோட்டாரை பறிமுதல் செய்தும், அவருடைய தொழிற்சாலைக்கு வணிகத்திற்கு உண்டான சொத்துவரி விதித்தும் முழுமையாக கட்டிடத்தை அளந்தும் அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டியுள்ள கட்டடத்தை அகற்றியும் (remove) நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன் பிரிவுகள் 56 மற்றும் 57 உடன் படிக்கப்பட்ட பிரிவு 85ன் கீழ் stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும், அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய lock and seal and demolition notice வழங்கி மற்றும் அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும், மேற்படி திரு. இராஜா அவர்களுக்கு உடந்தையாக இருந்தும், கண்டும் காணாமல் போய்கொண்டு இருக்கும் உரிய அலுவலர், முன்னாள் மற்றும் இந்நாள் அலுவலர்கள் மீது

துறைரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுத்தும், எனக்கு சில அச்சுறுத்தல் இருப்பதால் எனக்கு பாதுகாப்பு அளிக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) மனுதாரரது புகார் மனு, 05.01.2023 நாளிட்ட மனுதாரரால் கைப்பட எழுதப்பட்ட அறிக்கை மற்றும் மதுரை மாநகராட்சி துணை ஆணையரின் அறிக்கை, மதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளரின் வாக்குமூலம், ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மதுரை மாநகராட்சி மண்டலம் 02 (வடக்கு) வார்டு எண் 1, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், கதவு எண்.63 மூன்றாவது கிராஸ் தெருவில் குடியிருந்து வரும் திரு. இராஜா என்பவர் தன் சொந்த வீட்டில் திருட்டுத்தனமாக டிஸ்டில்டு வாட்டர் (Distilled) பேட்டரிகளுக்கு ஊற்ற கூடிய தண்ணீர் தயாரிக்கும் பணியும் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையமும் நடத்தி வருகிறார். இதற்கு தேவையான தண்ணீரை மாநகராட்சி குடிநீரை 5 H.P. மின் மோட்டார் வைத்து உறிஞ்சி பெரிய தொட்டியில் நீரை நிரப்பி கொண்டு அவருடைய தொழிற் நிறுவனத்திற்கு பயன்படுத்தி கடந்த நான்கு ஐந்து ஆண்டுகளாக நடத்தி வருகிறார். வீட்டில் இச்சிறு தொழிற்சாலை செய்வதற்கு முறையாக உரிய துறைகள் மூலம் அனுமதி ஏதும் பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக நடத்தி வருகிறார். மேலும் இக்கட்டிடத்திற்கு வணிகத்திற்கான (commercial) சொத்துவரி வசூலிக்கப்படவில்லை. சாதாரண வீட்டுவரி வசூலிக்கப்படுகிறது. தொழில்வரியும் வசூலிக்கப்படுவதில்லை என தெரிவித்து உரிய நடவடிக்கை எடுத்திட கோரியுள்ளார்.

மனுதாரர் குற்றம் சாட்டியுள்ள டிஸ்டில்டு வாட்டர் தயாரிக்கும் நிறுவனம் D & O உரிமம் பெற்றுள்ளது. ஆனால் வணிகவரி விதிக்கப்படவில்லை. மாறாக அக்கட்டத்திற்கு குடியிருப்பு வரியே மாநகராட்சியால் வசூலிக்கப்பட்டு வருகிறது. அக்கட்டத்திற்கு வணிகவரி விதித்திட நடவடிக்கை தற்பொழுதுதான் எடுக்கப்பட்டு வருவதாக மதுரை மாநகராட்சி அலுவலர்கள் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர். மேற்கண்ட நிறுவனம் கடந்த 2010க்கு முன்னர் அதாவது மதுரை மாநகராட்சி ஆவதற்கு முன் பேரூராட்சியின் மூலம் குடிநீர் இணைப்பு பெற்றுள்ளனர். சட்டத்திற்கு புறம்பாக குடிநீரை அந்நிறுவனம் பயன்படுத்தி வருகிறதா என்பதையும், அந்நிறுவனத்திலிருந்து வெளியேறும் கழிவு நீர் முறையாக வெளியேற்றப்படுகிறதா என்றும் கண்காணிக்கப்பட்டு வந்துள்ளது என்பதையும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது. துணை ஆணையர் அறிக்கையிலிருந்து மேற்கண்ட நிறுவனத்திற்கு 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம் 282, 296 (1) & (2) பிரிவின் கீழ் நோட்டீஸ் தயார் செய்து சார்பு செய்யப்பட்டது என்றும் இந்த விவரம் மனுதாரருக்கும் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறியமுடிகிறது.

இந்நேர்வில் மக்களுக்கு அடிப்படை வசதியான குடிநீர் வசதியை மேம்படுத்துவதிலும் மாநகராட்சியின் வருவாய் இனங்களை பெருக்கிடவும் உரிய நடவடிக்கை மாநகராட்சி கள அலுவலர்களால் மேற்கொள்ளப்படவில்லை என்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது.

திரு. இராஜா அவர்கள் நடத்தி வரும் நிறுவனத்திற்கு அந்நிறுவனம் தொடங்கப்பட்ட காலம் முதல் வணிகவரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் நாளது தேதி வரையில் வணிகவரி விதிக்கப்படவில்லை. எனவே இந்நேர்வு தொடர்பாக கீழ்க்கண்டவாறு நடவடிக்கை எடுக்க மதுரை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

i) மதுரை மாநகராட்சி மண்டலம்–02(வடக்கு) வார்டு எண்.1. புதுவிளாங்குடியில் உள்ள செம்பருத்தி நகர் க.எண்.63, மூன்றாவது குறுக்குத்தெருவில் இயங்கி

வரும் டிஸ்டில்டு நிறுவனம் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளதை மாநகராட்சியினர் கண்டும் காணாமல் இருந்துள்ளனர். இச்செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கது. இதற்கு பொறுப்பான அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

ii) திரு.இராஜா அவர்கள் நடத்தி வரும் டிஸ்டில்டு வாட்டர் தயாரிக்கும் நிறுவனத்திடமிருந்து அந்நிறுவனம் தொடங்கப்பட்ட ஆண்டிலிருந்தே வணிகவரி வசூல் விதிக்காமல் மாநகராட்சிக்கு இழப்பினை ஏற்படுத்திய சம்மந்தப்பட்ட அலுவலர்கள் சம்பளத்திலிருந்து அதனை பிடித்தம் செய்யப்பட வேண்டும். ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும்.

iii) அரசு வழிகாட்டுதலின்படி நிலத்தடிநீரை அந்நிறுவனம் எடுத்துவருகிறதா என்பதையும், அந்நிறுவனத்திலிருந்து கழிவுநீர் முறையாக வெளியேற்றப்படுகிறதாஎன்பதையும் அவ்வப்போது தல ஆய்வு செய்யப்பட வேண்டும்.

iv) அனுமதியற்ற கட்டடத்தின் மீது மாநகராட்சியால் மேற்கொள்ள வேண்டிய சட்டபூர்வமான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

v) அனுமதிக்கப்பட்டவாறு மேற்படி நிறுவனத்தில் கட்டடம் கட்டப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்திடவும் ஏதேனும் விதிமீறல்கள் இருப்பின் அதற்குரிய தாக்கீதுகளை வழங்கிடவும் மதுரை மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

vi) அந்நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்திட மதுரை மாவட்ட நீர்வளமேலாண்மைத்துறை தலைமைப்பொறியாளர்/கண்காணிப்பு பொறியாளரை இம்முறைமன்ற நடுவம் கேட்டுக்கொள்கிறது.

vii) மேலும் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் அறிக்கையினை **3** மாத காலத்திற்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிட மதுரை மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

**2023**–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் **21**–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

**1)**திரு. இரா.மயில்சாமி,
த/பெ. இராமலிங்கம்,
மனை எண்.**5**, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி,
மதுரை – **625 018.**

**2)**ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

**3)**நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – **600 028.**

**4)**தலைமைப்பொறியாளர்,
நீர்வள ஆதார அமைப்பு
மதுரை மண்டலம், தல்லாகுளம்,
மதுரை – **625 002.**

**5)**கண்காணிப்பு பொறியாளர்,
நீர்வள ஆதாரத்துறை
பெரியார் வைகை வடிநில வட்டம்,
தல்லாகுளம், மதுரை – **625 002.**

**6)**இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – **600 028.**

**7)** உதவி ஆணையர்,
மண்டலம் **–02,**
மதுரை மாநகராட்சி,
மதுரை.
நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக